சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – எட்டு சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் அமைத்தல் – "கோயம்புத்தூர் மாவட்டத்தில் வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்" அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.32 நாள் 01.03.2018

திருவள்ளுவராண்டு, 2049
ஹேவிளம்பி வருடம், மாசி–17

படிக்கப்பட்டது:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண். 5894/உ1/2017, நாள் 09.02.2018.

~*~~*~

ஆணை:–

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்:–

> "தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் தனித்தன்மை வாய்ந்த பொருள் சார்ந்த நூலகங்கள் மற்றும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்படும். சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக் கலைகள் சார்ந்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் சார்ந்து திருச்சியிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் இவை அமைக்கப்படும். மேற்கண்ட சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி செலவில் மொத்தம் ரூ.8 கோடி செலவில் அமைக்கப்படும்".

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழர்களின் வாழ்க்கையோடு வானியல் அறிவு காலங்காலமாக ஒன்றிணைந்து காணப்படுகிறது என தெரிவித்துக் கொண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்கிய ஜி.டி.நாயுடு பிறந்த நகரமான கோயம்புத்தூரில் வானியல் மற்றும் புதுமைக் கண்டுப்பிடிப்புகளை பாதுகாக்கும் பொருட்டு, கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலக இரண்டாம் தளத்தில் சுமார் 1236 சதுரடி பரப்பளவு கொண்ட இடத்தில் "வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்" அமைக்க தேவையான உட்கட்டமைப்புப் பணிகள் மற்றும் இதரசெலவினங்களை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத் தொகை ரூ.25,66,154/–ஐ (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நூற்று ஐம்பத்து

(த.பி.பா)

நான்கு மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ள அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்:–

| | | |
|---|---|---|
| 1. | காட்சிக்கூடம் அமைக்க உள்ள அறையில் கட்டடம் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.9,25,000/– |
| 2. | காட்சிக்கூடத்தில் அதற்கான மின் பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.8,10,000/– |
| 3. | காட்சிக்கூடம் அமைக்க அலுமினியத்தில் கட்டம் அமைத்தல்/ வினையல் பெயிண்டிங் மேற்கொள்ளுதல் | ரூ.5,74,680/– |
| 4. | காட்சிக்கூடம் சார்ந்த உபகரணம்/கருவிகள் வாங்குதல் | ரூ.2,36,700/– |
| 5. | அறிவியல் சார்ந்த நூல்கள் வாங்குதல் | ரூ.19,774/– |
| | மொத்தம் | ரூ.25,66,154/– |

3. பொது நூலக இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை ஏற்று, கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலக இரண்டாம் தளத்தில் சுமார் 1236 சதுரடி பரப்பளவு கொண்ட இடத்தில் "வானியல் மற்றும் புதுமைக் கண்டுப்பிடிப்புகள் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்" அமைப்பதற்கும் மற்றும் அதற்கான செலவினத் தொகையான ரூ.25,66,154/–ஐ (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.610/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 21.02.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை–6.

<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்